

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

## இதழின் உள்ளே....

☆ ஆசிரியருரை
☆ உலக அளவில் பிரசித்திபெற்ற J.C.சோட் அவர்களின் செய்தி
☆ பெண்களுக்கான பகுதி
☆ சிறுவர்களுக்கான பகுதி
☆ வேத அறிவுப் போட்டி
☆ நாதன் அவர்களின் சரித்திர ஆய்வு
☆ நாளும் நடப்பும்

ஜனவரி
2007

ஆசிரியர்
B.அர்ஜுனன்

மரம் 7 கனி 2

வாசகர் அனைவருக்கும்


# 2007 ம் வருட

# புத்தாண்டு வாழ்த்துக்கள்



கர்த்தரின்
ஆசீர்வாதமே
ஐசுவரியத்தைத் தரும்

—நீதிமொழிகள் 10:22





## கிறிஸ்துவின் சபையார் வழங்கும்

## கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி




உங்கள் WIN TV -யில்
ஒவ்வொரு வாரமும் திங்கள்,
செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி
காலை 6.15 முதல் 6.30 மணி வரை
பாருங்கள். மேலும்
உங்கள் வானொலியில் இலங்கை
ஆசிய சேவை SW 49 மீட்டரில்,
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல்
6.00 மணி வரை கேளுங்கள்.

செய்தியாளர்
B. அர்ஜுனன்



THE WORD OF CHRIST
P.O.BOX.5
BATLAGUNDU -624 202 S.INDIA
Phone: 04543 263278 Mobile: 9443558041




"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 7 ஜனவரி – 2007 கனி – 2

ஆசிரியருரை

## விசுவாசம் பரீட்சிக்கப்படுதல்
*Faith Tested*



புத்தாண்டிலே இச்செய்தியின் மூலம் உங்களை சந்திப்பதிலே மிக்க மகிழ்ச்சியடைகிறோம். புத்தாண்டிலே பல நல்ல தீர்மானங்களை எடுத்திருப்பீர்கள் என நம்புகிறோம். கர்த்தர் அவைகளை வாய்க்கச் செய்வாராக!

நம்முடைய விசுவாசம் அநேகமுறை பரீட்சிக்கப்படுகிறது. அந்தவிதமான பரீட்சையில் நாம் சில வேளையில் சோர்ந்துபோகிறோம். யாக்கோபு சொல்லுகிறார்; "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" (யாக்.1:2,3). நமக்கு வரக்கூடிய சோதனைகளை சந்தோஷமாக ஏற்று அவைகளை மேற்கொள்ள முயற்சிக்கவேண்டும். படிக்கும் மாணவர்களை கவனித்துப்பாருங்கள் பள்ளி சென்றவுடன் அவர்கள் ஒரு நல்ல நிலைமைக்கு வந்துவிடுகிறது இல்லை. படிப்படியாக உயர்வகுப்புக்கு வருகிறார்கள். ஒவ்வொருமுறையும் அவர்களுக்கு இறுதித்தேர்வு வைக்கப்படுகிறது. ஏன் இந்தப் பரீட்சை? அவர்கள் நன்கு படித்திருக்கிறார்களா என்பதை ஆய்வுசெய்ய இந்தவிதமான சோதனை நடத்தப்படுகிறது. ஒரு விசுவாசிக்குங்கூட இந்தவிதமான பரீட்சை வருகிறது. அவனுடைய விசுவாசம் எத்தகையது என்பதை ஆய்வுசெய்யும்படியாக நடத்தப்படுகிறது.

"விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்" (எபி.11:17). இதனால் அவன் ஆசீர்வதிக்கப்பட்டான். நீ உன் புத்திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்; நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து

நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொன்னார்.

விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குகிறது. பயிற்சி வெற்றிக்கு அறிகுறியாக அமைகிறது. "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்" (யாக்.1:12). நமக்கு வரக்கூடிய சோதனைகளில் வெற்றியடையும்போது அல்லது அவைகளை பொறுமையோடு சகிக்கும்போது, கர்த்தர் நமக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப்பெறுவோம். பரீட்சையை நாம் சந்தோஷமாக ஏற்கவேண்டும். நலமான காரியங்களை பெற்றுக்கொள்ளவே இவைகளை நாம் சந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். "நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப் பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்னசெய்வாய்?" (எரே.12:5). இங்கே கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு உணர்த்தும் காரியம். நான் உன்னைக் காலாட்களோடே ஓடப்பண்ணியிருக்கிறேன் இதிலே நீ சோர்ந்துபோவாயானால், குதிரைகளோடே உன்னை ஓடவைக்கப்போகிறேன் நீ எப்படிசேர்ந்து ஓடுவாய்? என கேள்வி எழுப்புகிறார். தேவன் நமக்கு மேன்மையான ஆசீர்வாதங்களை வாக்குபண்ணி யிருக்கிறார். அவைகளை நாம் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் இவ்விதமான பயிற்சி நமக்கு அவசியமாக இருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் மக்களுக்கு எரிகோ பட்டணத்தை கொடுக்கும்போது, அதை அவர்கள் சுதந்தரித்துக்கொள்ளும் முன் சில காரியங்களை அவர்களுக்குச் சொல்லியிருந்தார். என்னவென்றால், "யுத்தபுருஷராகிய நீங்கள் அனைவரும் பட்டணத்தைச் சூழ்ந்து ஒருதரம் சுற்றிவாருங்கள்; இப்படி ஆறுநாள் செய்யக்கடவீர்கள். ஏழு ஆசாரியர் பெட்டிக்கு முன்பாக ஏழு கொம்பு எக்காளங்களைப் பிடித்துக்கொண்டு போகவேண்டும்; ஏழாம்நாளில் பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவரக்கடவர்கள்; ஆசாரியர் எக்காளங்களை ஊதவேண்டும். அவர்கள் அந்தக் கொம்புகளினால் நெடுந்தொனி இடும்போதும், நீங்கள் எக்காளசத்தத்தைக் கேட்கும்போதும், ஜனங்கள் எல்லாரும் மகா ஆரவாரத்தோடே ஆர்ப்பரிக்கக்கடவர்கள்; அப்பொழுது பட்டணத்தின் அலங்கம் இடிந்துவிழும்; உடனே ஜனங்கள் அவரவர் தங்களுக்கு நேராக ஏறக்கடவர்கள் என்றார்" (யோசு.6:3–5). ஒரு சிறப்பான பயிற்சியை

அவர்களுக்கு கொடுத்ததை பார்க்கிறோம். இந்தப்பயிற்சியிலே அவர்கள் சோர்ந்துபோய் ஒவ்வொருநாளும் ஒவ்வொருமுறை சுற்றிவந்துவிட்டோம் ஏழாம் நாளில் ஏழுமுறை சுற்றவேண்டுமா? ஒருநாள் மட்டும் சுற்றினால் போதாதா என்று நினைக்கவில்லை. கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிட்டவைகளைச் செய்ய சோர்ந்துபோகாமல் பொறுமையுடன் செய்தபடியினாலே ராஜ்யங்களை ஜெயித்தார்கள். இந்தவிதமான பொறுமை நமக்கும் வேண்டும்.

"அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" (1பேது.1:7). அழிந்துபோகக்கூடிய பொன் அக்கினியினாலே சோதிக்கப்படுமானால் நம்முடைய விசுவாசம் அதைக்காட்டிலும் மேலானது அல்லவா! அந்த விசுவாசம் சோதிக்கப்படும்படியாக தேவன் நம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறார். தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. பிசாசு அநேகவேளைகளில் நம்மை சோதிக்கும்படியாக உத்தரவு கேட்டுக்கொள்கிறான் ஆகையால் தேவன் பிசாசுக்கு அனுமதி கொடுக்கிறார். யோபுவின் விசுவாசம் சோதிக்கப்படும்படியாக கர்த்தர் சாத்தானுக்கு அனுமதிகொடுத்ததை நாம் யோபு புத்தகத்திலே வாசிக்கிறோம். "அப்பொழுது சாத்தான் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு, யோபின் உள்ளங்கால்தொடங்கி அவன் உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால் அவனை வாதித்தான். அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து: நீர் இன்னமும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள். அதற்கு அவன்: நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான்; இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை" (யோபு 2:7–10). யோபுவுக்கு வந்த சோதனைபோல வந்தவுடன் அநேகர் சோர்ந்துபோய் விசுவாசத்தை விட்டு பின்வாங்கிப்போகின்றனர். யோபு உறுதியுடனிருந்து இரட்டிப்பான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டதைப்போல பெற்றுக்கொள்ள தவறிவிடுகின்றனர்.

விதைவிதைக்கிற உவமையிலே கர்த்தர் சொல்லும்போது; கற்பாறையின்மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும்போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்; ஆயினும் தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியினாலே, கொஞ்சக்காலமத்திரம் விசுவாசித்து, சோதனை காலத்தில் பின்வாங்கிப்போகிறார்கள் என்று சொல்லுகிறார். ஆம் எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே இப்படியே அநேகர் வீழ்ந்துபோகின்றனர். நீங்கள் கர்த்தருடைய வார்த்தையை உங்களுடைய இருதயத்தின் ஆழத்தில் வைத்திருக்கிறீர்களா? இருதயத்தின் ஆழத்தில் வைத்து பலன் கொடுங்கள்.

நல்ல மனுஷன் தன் இருதயமாகிய பொக்கிஷத்தில் வைத்து பலன்கொடுக்கிறான் என்று நாம் பின்னுள்ள வசனங்களில் வாசிக்கிறோம். வழியருகே விதைக்கப்பட்ட விதையைப்போல கர்த்தருடைய வசனத்தை உதாசினப்படுத்திவிடாதீர்கள். கர்த்தர் அதற்கேற்ற பலனைக்கொடுப்பார் என்ற நம்பிக்கையோடு அவைகளில் நிலைத்திருங்கள். நம்முடைய தேவன் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிற தேவன். இஸ்ரவேலின் ராஜாவைப்பார்த்து எலிசா தீர்க்கதரிசிசொன்ன வார்த்தை; "கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள். நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள்; ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும் உங்கள் மிருகஜீவன்களும் குடிக்கும்படிக்கு, இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்" (2இரா.3:16,17). அன்பானவர்களே, உங்கள் வாழ்நாட்களில் சந்தேகப்படாமல் இந்த அற்புதமான தேவனை நோக்கி விசுவாசத்துடன் கேளுங்கள். அவர் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற தேவன்.

சாறிபாத் ஊரிலே இருந்த ஒரு விதவைப்பெண்ணுக்கு ஒரு பரீட்சை வந்தது. என்னவென்றால் எங்கும் வறட்சி. பானையில் ஒரு பிடிமாவும், கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே இருந்தது. அதை ஆயத்தப்படுத்தி சாப்பிட்டு செத்துப்போக இரண்டு விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள். அப்பொழுது எலியா தீர்க்கதரிசி இவளிடம் அனுப்பப்பட்டார். அவர் வந்து அவளைப் பார்த்து கூப்பிட்டு, நான் குடிக்கிறதற்குக் கொஞ்சம் தண்ணீர் ஒரு பாத்திரத்தில் எனக்குக் கொண்டுவா என்றார். அவள் தன்னுடைய கதையை சொன்னாள். "அப்பொழுது எலியா அவளைப்பார்த்து: பயப்படாதே; நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம். கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையில் மா செலவழிந்துபோவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள்; அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள். கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை" (1இரா.17:13–16). இந்த விசுவாச பரீட்சையிலே சாறிபாத் விதவைப்பெண் சோர்ந்துபோய், எங்களுடைய சாப்பாட்டிற்கு இந்த தீர்க்கன் பங்குபோட வந்துவிட்டான் என்று எண்ணியிருப்பாளேயானால், மரித்துபோயிருப்பாள், தேவஆசீர்வாதத்தையும் பெற தவறியிருப்பாள். தேவனுடைய மனுஷனின் வார்த்தையின்படியே செய்தபடியால் காக்கப்பட்டாள் அவளுடைய குடும்பம்காக்கப்பட்டது. இவளைப்போல சோர்ந்துபோகாது விசுவாச பரீட்சையில் நிலைத்திருங்கள்.

# சாத்தான் இருக்கின்றான் என நாம் ஏன் நம்புகிறோம்
## *Why We Believe In The Existence of Satan*

J.C.Choate



குறிப்பாக நவீன நாட்களில் சாத்தான் இருக்கிறான் என ஏன் ஒருசிலர் நம்புகின்றனர் என ஆச்சரியப்படுகிறவர்கள் இருப்பார்கள். மனிதன் விண்வெளிக்குச் செல்லுகின்ற இந்நாட்களில் சாத்தானைப் போல குணம்படைத்த ஒன்று நிச்சயமாக இந்நாட்களில் இருக்கமாட்டான் என அவர்கள் காரணம் காட்டுவார்கள். இந்த காரணத்திற்காக அந்த ஜனங்கள், தங்களை வஞ்சித்துக் கொள்ளுகின்றனர்.

ஆம், சாத்தான் இருக்கிறான். அவன் வாழ்கிறான். அவன் தேவனைப் போலவும் கிறிஸ்துவைப்போலவுமிருக்கிறான். அவன் உலகமுழுவதும் வாழ்கிறான். அவனுடைய கிரியைகள் எல்லாவிடங்களிலும் காணப்படுகிறது. ஒவ்வொருவரிடத்திலும் அவனுடைய செல்வாக்கு காணப்படுகிறது. அதுமாத்திரமல்ல, அவன் இந்த உலகில் இருக்கிறான் என வேதாகமம் போதிக்கிறது. அவன் தேவனும் கிறிஸ்துவும் எடுத்துக்கூறுகின்றவற்றிற்கு அதிக விரோதமாக செயல்படுகிறான். அவன் எப்போதும் மோசமானதும் தவறானதுமானவற்றிற்கும் பின்னால் இருக்கின்றான். அவன் பிசாசு என்றும் பொல்லாங்கன் என்றும், பொய்யுக்குப் பிதா என்றும், இவ்வுலகத்தின் அதிபதி என்றும் அழைக்கப்படுகிறான். அவன் இருளையும், பாவத்தையும், வருத்தத்தையும் ஏற்படுத்துகிறான். அவன் மரணத்தை ஏற்படுத்தி, நித்திய அழிவைக்கொண்டு வருகிறான். அவன் நம்முடைய விரோதியாயிருப்பதினால் அவனை அறிமுகப்படுத்த வேண்டியது அவசியம். அவனை நாம் அறிந்து கொள்வதும் அவன் எவ்வாறு செயல்படுகிறான் என புரிந்துகொள்ளுவதும் நல்லது, அவனை சந்திக்க நம்மை ஆயத்தமாக்கிக் கொள்வது நல்லது. இந்த விதமான அறிவு, சரியான ஆயுத்ம் இல்லாவிட்டால் அவன் நம்மை வஞ்சித்து, நம்மை மேற்கொண்டு நம்மை அழித்து விடுவான்.

இப்போது நாம் தேவனுடைய வார்த்தைக்குச்சென்று, அவனைப் பற்றியும் அவன் கிரியைகள் பற்றியும் பேசுகின்ற வேதவாக்கியங்களின் சில வசனங்களை வாசிப்போம். கோதுமை வயலில் காணப்படும் களைகளைப் பற்றிய உவமையை விளக்குகையில், இயேசு களைகள் பொல்லாங்கனுடைய பிள்ளைகளாக இருக்கின்றனர் என்றார். மேலும் "அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு" (மத்.13:38,39) என்றார். பேதுரு தன்னுடைய நாட்களில் இருந்த

கிறிஸ்தவர்களுக்கு, "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" (1பேது.5:8) என்று எழுதினார். பவுல் சாத்தானை சோதனைக்காரன் என்று பேசுகிறான், அவன், "ஆகையால், நான் இனிப் பொறுத்திருக்கக் கூடாமல், எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாகச் சோதனைக்காரன் உங்களை சோதனைக் குட்படுத்தினதுண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு, அவனை அனுப்பினேன்" (1தெச.3:5) என்றான். இயேசுவின் நாட்களிலிருந்த மதக்குழு கர்த்தர் பெயல்செபூலின் வல்லமையினால் பிசாசுகளைத் துரத்துகிறார் என்று குற்றப்படுத்தினது. "அப்பொழுது, பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டுவரப்பட்டான்; குருடும் ஊமையுமானவன் பேசவுங் காணவுந்தக்கதாக அவனைச் சொஸ்தமாக்கினார். ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு; தாவீதின் குமாரன் இவர்தானோ? என்றார்கள். பரிசேயர் அதைக்கேட்டு; இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றப்படியல்ல என்றார்கள். இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலை நிற்கமாட்டாது. சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்கும்; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்? நான் பெயல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. அன்றியும், பலவானை முந்திக் கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம். என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" (மத்.12:22–30) என்று வாசிக்கிறோம்.

அப்போஸ்தலனாகிய யோவான், "பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால், உங்களுக்கு எழுதியிருக்கிறேன். வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவ வசனம் உங்களில் நிலைத்திருக் கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன்" (1யோவா.2:14) என்று எழுதினான். யோவான் தொடர்ந்து சொல்லுகையில், "நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டு மென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது. பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்க வேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலை செய்தான்? தன்

கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே" (1யோவா.3:11,12) என்கிறான். மீண்டும், அவன், தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான். நாம் தேவனால் உண்டாயிருக்கிறோ மென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக் கிறோம்" (1யோவா.5:18,19) என்றான். பிறகு யோவான் வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தில், "உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்" (வெளி.12:9) என்று எழுதினான். பிசாசுக்கு என்ன நடந்தது என இன்னுமதிகமாக விளக்குகையில், யோவான், "ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரியசங்கிலியையும் தன்கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான். அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாக வேண்டும்" (வெளி.20:1–3) என்றான்.

கிறிஸ்து அவனுடைய நாளைக் குறித்து சிலவற்றைச் சொன்னார், "நீங்கள் உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான். நான் உங்களுக்குச் சத்தியத்தைத் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை" (யோவா.8:44,45). இயேசு தம்முடைய சீஷர்களுக்கு, "இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" (யோவா.14:30) என்றார். பவுல் கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு, "எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப் போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும். தேவனுடைய சாயலா யிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" (2கொரி.4:3,4) என்றான்.

ஆனால் சாத்தான் எங்கிருந்து வந்தான்? நீங்கள் ஒருவேளை இவ்வாறு கேட்கலாம். சகலத்தையும் தேவன் சிருஷ்டித்தபடியினால், பிறகு

இயற்கையாகவே தேவன் அவனையும் அவனோடே இணைந்த எல்லா தூதர்களையும் சிருஷ்டித்தார். வேதவாக்கியம் அவன் தன்னை உயர்த்தி தன்னுடைய சிருஷ்டிகருக்கு விரோதமாக கலகம் செய்து தேவனுடைய சத்துருவாக மாறினான். நாம் 2பேது.2:4–ல், "பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து;" என்று வாசிக்கிறோம். மேலும் தேவன் தப்பவிடவில்லை என மற்ற விளக்கங்களைக் கொடுப்பதற்கு தொடர்ந்து முயலுகிறார், குறிப்பு என்னவென்றால், நாம் தேவனையும் அவருடைய சித்தத்தையும் எதிர்த்தால், நாமும் அந்த விளைவுகளை அனுபவிக்க வேண்டியவர்களாயிருப்போம். யூதா புத்தகத்தில் "தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார்" (யூதா6) என வாசிக்கிறோம். நியாயத்தீர்ப்பின் நாளிலே கிறிஸ்து பொல்லாங்கனைப் பார்த்து, "...சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" (மத்.25:41) என்பார்.

ஆரம்பநாட்களுக்குத் திரும்புகையில், தேவன் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்து, ஏதேன் தோட்டத்தில் அவர்களை வைத்தார் என்றும், அவர்கள் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைத் தவிர தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியைப் புசிக்கலாம் என்று விவரித்தார் என்றும் நாம் அறிவுறுத்தப்படுகிறோம். இது அவர்கள் அவற்றைப் புசித்தால் நிச்சயமாகவே அவர்கள் சாவார்களென அவர்களுக்குத் தெளிவுப்படுத்தப்பட்டது. இப்போது நாம் வாசிக்கலாம், "தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும்

கொடுத்தாள், அவனும் புசித்தான். அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள். பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு; நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான். அப்பொழுது அவர்: நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார். அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள்" (ஆதி.3:1–13) என வாசிக்கிறோம். நிச்சயமாகவே அந்நாளில் மனுஷனும் மனுஷியும் ஆவியில் மரித்தார்கள், ஆனால் தேவன் தொடர்ந்து மனுஷன், மனுஷி, சர்ப்பம் மற்றும் சகல சிருஷ்டிகளின் மேலும் சாபங்களை வைத்தார். மத்தேயு 4–ல் சோதனைக்காரனாகிய சாத்தானே கிறிஸ்துவினிடத்தில் வந்தான். அவன் கிறிஸ்துவை தனக்கு முன் சாஷ்டாங்கமாய் விழுந்து தன்னைப் பணிந்துகொள்ளப்பண்ணும்படிக்கு அவரை அவன் மூன்று முறை பல்வேறு சமயங்களில் சோதித்தான். ஆனால் ஒவ்வொரு முறையும் கிறிஸ்து கர்த்தர் இப்படிச்சொல்லியிருக்கிறாரே என்று பதிலளித்தார். கடைசியாக, பிசாசு தோல்வியடைந்தவனாகக் கடந்து சென்றான்.

கிறிஸ்து கல்லறையிலிருந்து வெளிவந்தபோது அவர் தான் தேவனுடைய குமாரனென நிருபிக்கும்படி மாத்திரமல்ல, மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தும்படிக்கும் மேலும் ஒவ்வொருவருக்கும் எதிர்கால உயிர்த்தெழுதல் உண்டு என உறுதிப்படுத்தும்படிக்கும் கிறிஸ்து அந்த பலத்த செயலை செய்து சாத்தான் மேல் வெற்றிச் சிறந்தார் என்பதே மாபெரும் வெற்றியாகும். கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து கர்த்தரிடத்தில் கொண்டுள்ள விசுவாசத்தில் நிலைத்திருக்கும் ஒவ்வொருவரும் அவர் தங்களை இரட்சிப்பார், எல்லா சோதனைகளையும் மேற்கொள்ள தங்களுக்கு உதவிசெய்வார் மேலும் கடைசியாக தங்களை பரலோகத்திற்கு எடுதுச் செல்வார் என்ற வாக்குத்தத்தைப் பெற்றுள்ளனர்.

என்னுடைய நண்பரே, பழைய பிசாசு உங்களுடைய வாழ்க்கையைக் கட்டுப்படுத்த சாத்தானுக்கு இடம் கொடுக்காதீர்கள். உங்களை உலக சம்பத்துக்குள்ளாக கொண்டு செல்ல சாத்தானுக்கு இடமளிக்காதீர்கள். உலகப்பொருட்களைப் பயன்படுத்தவும், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் உங்களை வசீகரிக்கப்பண்ண சாத்தானுக்கு இடமளிக்காதீர்கள். நீங்கள் தவறான மார்க்கத்தைப் பின்பற்று வதற்கும் மனிதப்போதனைகளால் உங்களை வஞ்சிப்பதற்கும், உங்களை மறுதலிக்கப்பண்ணுவதற்கும், சாத்தானுக்கு இடமளிக்காதீர்கள், மரணத்திற் குள்ளாக்கும். சாத்தானைப் பின்பற்றவேண்டாமென கிறிஸ்து நம்மை வேண்டிக் கொள்கிறார். வேதாகமம், தேவனுடைய வார்த்தை, சத்தியத்தின் அழகையும் நித்தியஜீவனுக்குப் போகும் வழியையும் நம்முன் வைத்திருக்கிறது, ஆனால் அதே சமயம், நித்திய மரணத்திற்கு இட்டுச்செல்லுகிற சாத்தானுடைய கண்ணிக்கும் வஞ்சகமான வழிகளுக்கும் எதிர்த்துநிற்கும்படி நம்மை எச்சரிக்கிறது.

சாத்தானுக்கு எதிர்த்துநிற்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். அவனால் வஞ்சிக்கப்படாதிருங்கள். உடனே தேவனுடைய வார்த்தையைப் படியுங்கள். கர்த்தரைப்பற்றியும் அவருடைய வழிகளைப் பற்றியும் கற்றுக்கொள்ளுங்கள், ஆனால் உங்கள் எதிராளியாகிய பிசாசை வேதவாக்கியங்களின் மூலம் அடையாளங்கண்டுகொள்ளுங்கள். பிதாவாகிய தேவனிடத்திலும், ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசமாயிருங்கள். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி.11:6). கிறிஸ்து, நாம் தேவனிடத்தில் விசுவாசமாயிருந்தால் தம்மிடத்திலும் விசுவாசமாயிருக்க வேண்டும் என்றார் (யோவா.14:1–3). கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு விரோதமாயிருக்கிற சாத்தானையும் பாவத்தையும் விட்டு விலக வேண்டுமென அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார்.

தேவன், மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லா ருக்கும் கட்டளையிடுகிறார் என நாம் அறிவுறுத்தப்படுகிறோம் (அப்.17:30). மேலும், நாம் மனந்திரும்ப மறுத்தால் நாம் கெட்டுப்போவோம் என்று கிறிஸ்து சொல்லுகிறார் (லூக்.13:3). பிறகு நாம் கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட அழைக்கப்படுகிறோம் (மத்.10:2) நாம் மனுஷர் முன்பாக அவரை அறிக்கையிட்டால் அவர் நம்மை பரலோகத்தில் பிதாவின் முன்பாக அறிக்கையிடுவாரென கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார். கடைசியாக நம்முடைய பாவமன்னிப்புக்கென்று நாம் ஞானஸ்நானம் பெறும்படிக்கு அல்லது தண்ணீரில் அடக்கம்பண்ணப்படும்படிக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து, நாம் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டால் அவர் நம்மை இரட்சிப்பார் (மாற்.16:16) என்கிறார். பேதுரு, நாம் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டால் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வோம் (அப்.2:38)

என்கிறான். இப்போது நாம் அதைச் செய்யும்போது, கர்த்தர் நம்மை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வதாக வாக்களித்துள்ளார் (அப்.2:47), அப்போது நாம் கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாயிருப்போம் (2கொரி.5:17). இப்படியாக, இனி ஒருபோதும் நாம் சாத்தானுடையவர்களல்ல, ஆனால் கிறிஸ்துவுக்குரியவர்கள், கிறிஸ்தவர்களென அழைக்கப்படுகிறவர்கள் (1பேது.4:16), மேலும் பரலோகத்தில் நமக்கொரு வீட்டைப் பெறும்படிக்கு மரணபரியந்தம் கர்த்தரிடத்தில் விசுவாசத்துடனிருப்பவர்கள் (வெளி.2:10; 22:14).

Dear Readers,
Wish you all a Happy and Prosperous
New Year 2007
by
World Literature Publications



## வேதஅறிவுப்போட்டி எண் 76-ன் விடைகள்

1. ஐம்பதினாயிரம் - அப்.19:19
2. ஏசாயா - ஏசா.28:16
3. சந்தோஷமாய், பொறுமையாய், உறுதியாய்தரித்திருங்கள் - ரோம.12:12
4. ஐயோ - ஆப.2:6
5. பவுல் - 1கொரி.4:6
6. கர்த்தரை - சங்.101:6
7. ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள் - கலா.5:13
8. திருப்தியடைவான் - நீதி.12:14
9. ஏற்றுக்கொள்ளக்கூடாது - 1தீமோ.5:19
10. தானியேல் - தானி.6:10



### உலகிலேயே மிகச் சிறிய பைபிள்

இந்தச் சிறிய பைபிள் ஸ்காட்லாந்து நாட்டில் கி.பி1895-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது 520 பக்கங்களை கொண்டது. இதில் 1லட்சத்து 81ஆயிரத்து 253 வார்த் தைகளும், 8 லட்சத்து 38 ஆயிரத்து 380 எழுத்துக்களும் அச்சடிக்கப்பட்டுள்ளது. இதை தயாரித்து முடிக்க 4 ஆண்டுகள் ஆனது. ஒரு பக்கத்தின் அளவு நம்ம ஊர் ஸ்டாம்பு சைசில் 3-ல் ஒரு பங்கு அளவு கொண்டது. *-M.Rajamani*

## வேதஅறிவுப்போட்டி எண் 76-ல் வெற்றிபெற்றவர்கள்

Mr. ஜான் செல்லையா -செட்டிபாளையம்
E. ஜோசப் தேவதாஸ் -நாகமலை
P. அலிஸ்மேரியம்மாள் -வத்தலக்குண்டு
C. ஜாய்கிறிஸ்டினா -நாகமலை
S. சாம்பிச்சை -நாகமலை
P. சேகர் அன்னம்மாள் -வெள்ளகோவில்
K. சென்னியப்பன் -வெள்ளகோவில்
K. மோகன் -குமாரபாளையம்
A. லூர்துராணி -ஆனையூர்
S. ஆனந்த் -நாகமலை
S. ஆபிரகாம் -புதுப்பாளையம்
Mrs. வனிதாசாமுவேல் -மதுரை
J. நிர்மலா ஜான் -மதுரை
Mrs. லலிதாபிரேமகுமாரி -மதுரை
C. அமலா -கற்கோயில்
N. விஜய் ஆனந்த் -ஓலப்பாளையம்
G.P. ஏசையன்ராஜ் -கோபி
G. பூங்கோதை -கோபி
C.H. வித்யாராணி -சென்னை
Mrs. ஜாஸ்மின்வின்சென்ட்ராஜ்- மதுரரை
N. கமலவேணி -சென்னை
A. ஜோதிகாந்தம் -பாண்டியநல்லூர்
S. ஆனந்தராஜ் -ஈரோடு
R. ஆனந்தகுமார்-கடுக்கம்பாளையம்

# ஞான இருதயமுள்ள ஸ்திரீகள்

## The Women that were wise hearted

-*Glory Arjunan*

**பெண்கள் பகுதி**

இன்றைய நாட்களில் ஞானமே பிரதானமென ஞானத்தைத்தேடி உலகம் சென்று கொண்டிருக்கிறது. ஞானத்தினால் மனிதன் பலவற்றைக் கண்டுபிடித்துக்கொண்டேயிருக்கிறான். *John Lehmann* என்ற கவிஞர் இவ்வாறாக தன் கவிதையில் எழுதியுள்ளார்.

*"This excellent machine will illustrate*
*The modern world divided into nations;*
*So neatly planned, that if you merely tap it*
*The armaments will start their devastations"*

அதாவது "இந்த அற்புத எந்திரம் காட்டுவதெல்லாம்
இன்றைய நவீன உலகின் பிரிந்துபட்ட தேசங்களையே,
அத்துணை அற்புதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன; சற்றே தட்டினால் போதும்
அழிவுக் கருவிகள் ஆகாயத்தில் சீறிப்பாய்ந்து அழித்துவிடும்".

ஆம், உலக ஞானம் அழிவை நோக்கிச் செல்கின்றது. வேதவாக்கியத்தில் "யூதர்கள் அடையாளத்தைத் தேடுகிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள். நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்" (1கொரி.1:22,23) என பவுல் கூறுகிறார். மேலும் இந்த பவுல் தன்னைக் குறித்து கூறுகையில் "...கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்" (1கொரி.1:17) என்றார். அதாவது தான் பேச்சாற்றலில் சிறந்தவனல்ல என்கிறார். ஏனெனில் உலக ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாயிருக்கிறது ஆனால் உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவன் தம்முடைய ஜனங்கள் தம்முடைய ஞானத்தைப் பெற்றுக்கொள்ளவிரும்புகிறார். "... நான் ஞானத்தின் ஆவியால் நிரப்பின விவேகமான இருதமுள்ள யாவரோடும் நீ சொல்லுவாயாக" (யாத்.28:3) என்றார்

உங்களில் ஞான இருதயமுள்ள அனைவரும் வந்து கர்த்தர் கட்டளையிட்டவைகளையெல்லாம் செய்வார்களாக (யாத்.35:10) என்று மோசே சபையாரை நோக்கி கூறினான். இவ்வாறாக தேவ ஞானத்தைப் பெற்றவர்கள் என்ன செய்தார்கள்?

**கூடாரத்தை அலங்கரித்தார்கள் (*Beautifying the Tabernacle*):** தங்களுடைய கைகளின் பிரயாசத்தினால் ஆசாரிப்பு கூடாரத்தை

அலங்கரித்திருக்கிறார்கள். "ஞான இருதயமுள்ள ஸ்திரீகள் எல்லாரும் தங்கள் கைகளினால் நூற்று, தாங்கள் நூற்ற இளநீலநூலையும் இரத்தாம்பர நூலையும் சிவப்பு நூலையும் மெல்லிய பஞ்சு நூலையும் கொண்டு வந்தார்கள். எந்த ஸ்திரீகளுடைய இருதயம் ஞான எழுப்புதல் அடைந்ததோ, அவர்கள் எல்லாரும் வெள்ளாட்டு மயிரைத்திரித்தார்கள் .......தங்கள் இருதயத்தில் உற்சாகமடைந்த ஸ்திரீ...யாவரும் கர்த்தருக்குக் காணிக்கையை மனப்பூர்வமாய்க் கொண்டுவந்தார்கள்" (யாத்.35:25–29). இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைத் தொழுது கொள்ளும்படி வனாந்தரத்திலே ஓரிடத்திலிருந்து ஓரிடத்திற்கு எடுத்துச்செல்லக்கூடிய ஆசரிப்புக் கூடாரத்தைக் கொண்டிருந்தனர். தேவனை ஆராதிக்கும் இந்தக் கூடாரத்தைத் தான் அந்த ஸ்திரீகள் அலங்கரித்தார்கள்.

*–தொடரும்*

## *கிறிஸ்துவின் வசனம் மாத இதழின் இருபத்தைந்தாவது வாசகர் கருத்தரங்கு*

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தநாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கத்திற்கு விருதுநகர் மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கிறோம். அனுமதி இலவசம்.

நோக்கம் : ★ 1992முதல்2006 வரை வெளிவந்த இதழைக் குறித்த ஓர் ஆய்வு

★இருபத்தைந்தாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை

★ எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு

நாள் : ஜனவரி 27 – ம் தேதி சனிக்கிழமை, காலை 10.00 மணி

இடம் : Mr. ஜான்சன் அந்தோனிராஜ் c/o செல்லப்பா

37, B தென் பொன்னகரம், RMS நகர், ராஜபாளையம் – 626 108

*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*

R. ஜான்சன் அந்தோனிராஜ்

***9360689868***

## ஜெபியுங்கள்


- இவ்வருட ஊழியங்களுக்காக...
- கர்த்தருக்கு உண்மையாய் பணியாற்றக் கூடியவர்கள் எழும்ப ...
- இம்மாதம் நடைபெறவிருக்கும் 25வது கிறிஸ்துவின் வசன வாசகர் கருத்தரங்கிற்காக...
- உலகமெங்கும் அவருடைய சபைகள் கட்டப்பட ...
- **ARJUN-GLORY** சுகத்திற்காக ...
- கொடைக்கானல் ஊழியத்திற்காக ...



# நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே பின்பற்றி அவரையே சேவிப்போம்

## As For Me and My House, We Will Follow and Serve the Lord

*-Peter Mostert*



நித்தியமாக இழந்த நிலையில் இருக்கின்ற பயத்தினால் நான் ஒரு கிறிஸ்தவனாக மாறும்படிக்கு எனக்கு வலிமைமிக்க மன ஆயத்தம் கொடுக்கப்படலாம். நான் கிறிஸ்தவ சூழலில் வளர்க்கப்பட்டிருந்த போதிலும் அதாவது சிறுவயதிலிருந்தே என்னுடைய பெற்றோர் என்னை கிறிஸ்தவனாக வளர்த்திருந்த போதிலும், என்னுடைய தாயார் கர்த்தருடைய ஜெபத்தை எனக்கு போதித்தபோதிலும், நான் பல்வேறு சபைகளில் கலந்து கொண்டபோதிலும்– நான் முழுமையற்றவனாக உணர்ந்தேன்.

நான் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றபோது நான் பத்தொன்பது வயதுடையவனாகயிருந்தேன் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து வந்து நியூசிலாந்தில் ஊழியப்பணிசெய்து கொண்டிருந்த சபை அங்கத்தினர்கள் என்னுடைய சகோதரனையும், இரண்டு வருடங்களுக்குப்பிறகு என் தந்தையையும், தாயையும் என்னையும் அப்போஸ்தலர் 2:38–ன்படி சத்தியத்திற்குக் கீழ்ப்படியபண்ணினார்கள் – அதாவது மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியைப் பெறும்படி செய்தார்கள்.

இயேசுவில் விசுவாசம் கொள்வதில் எனக்கு ஒரு போதும் பிரச்சனை இருந்ததில்லை – எப்போதும் என்னுடைய ஆதி விசுவாசத்தின்படி இது நடைபெற்றது!

ஞானஸ்நானத்தில் கீழ்ப்படிவதில் எனக்குப் பிரச்சனை இல்லை – ஒருசமயம் நான் சத்தியத்தை விசுவாசித்தேன், நான் மனப்பூர்வமாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன்.

மனந்திரும்புதல் என்பது எனக்கு உண்மையிலே ஜீவியம் – மாற்றம் நிகழ்ச்சியாக இருந்தது. நான் என்னுடைய "உலகப்பிரகாரமான" நண்பர்களை விட்டு விலகி, ஒவ்வொரு ஆராதனைக்கும் சபையோடு சேர்ந்துகொண்டேன், மேலும் என்னுடைய வாரத்தின் இறுதி நாட்களை வீடுவீடாக சுவிசேஷத்தைப் போதிப்பதில் செலவழித்தேன். நான் கிறிஸ்துவுக்கு, என்னுடைய பிள்ளைகளை கஷ்டப்பட்டு முயற்சி செய்து கிறிஸ்தவர்களாக வளர்த்து அவர்களை ஒரு கிறிஸ்தவப்பல்கலைகழகத்திற்கு அனுப்பி, அவர்கள் கிறிஸ்தவர்களை திருமணம்

செய்யும்படி உற்சாகப்படுத்தி, ஊழியக் களத்தில் நுழைந்து கிறிஸ்துவின் சபையில் வழிநடத்துனர்களாக மாறவும் அர்ப்பணித்து நிலைத்திருந்தேன்.

என்னுடைய ஒட்டு மொத்த கிறிஸ்தவ அனுபவம் முழுவதிலும், எப்படியோ, நான் தொடர்ந்து மல்லுக்கட்டுவதே மிச்சமாயிருந்தது மேலும் புரிந்து கொள்வதிலும் விசுவாசிப்பதிலும் கடினமான சூழ்நிலையைப் பெற்றிருந்தேன். இவ்வுலகில் தேவன் அதிகமாக வேதனையையும், துன்பத்தையும் அனுமதிக்கிறார் என்பதையும் அவருக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு தேவன் நரகத்தை அனுமதிக்கிறார் என்பதையும் நம்புவதற்குக் எனக்குக் கடினமாக இருந்தது; என்னைப் போன்ற பலவீனரை தேவன் தம்முடைய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பயன்படுத்துகிறார் என நம்புவதற்கும் கஷ்டமாகயிருந்தது; ஞானஸ்நானம் பெற்றவர்கள் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்களென நம்புவதற்கும் கடினமாகயிருந்தது; என்னுடைய பாவங்களுக்காக இயேசு மரிக்க வேண்டியிருந்தது என நம்புவதற்கும் கடினமாகயிருந்தது; என்னுடைய தாலந்துகளை நான் பயன்படுத்தாவிட்டால் தேவன் என்னை ஏற்றுக்கொள்ள மாட்டாரென நம்புவதற்கும் கடினமாகயிருந்தது; சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்காத எண்ணிலடங்கா மில்லியன் ஜனங்கள் அழிந்து, அப்படியே போய்விடுவார்களென நம்புவதற்கும் கடினமாகயிருந்தது.

ஆனால் "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது" (ஏசா.55:8,9) என்று தேவன் சொல்கிறார். படைக்கப்பட்டது படைத்தவரை நியாயந்தீர்க்கும் நிலையிலில்லை, நமக்குக் கடினமாகத் தோன்றுகிறது அல்லது நம்மால் புரிந்துகொள்ள முடியாதது என தேவனுடைய நியமங்களை மாற்றி எழுதுவதற்கும் நமக்கு அதிகாரமில்லை. நம்முடைய தேவன் சர்வ வல்லமையுடையவர். அவர் செய்கிறதெதுவோ அது சரியானது. காத்திருக்கவேண்டியதே நம்முடைய பங்கு. இன்று கடினமாகத் தோன்றுகிறவைகளை ஒரு நாள் நாம் புரிந்துகொள்ளுவோம்.

ஆனால் ஒரு மனிதனாக, இந்தக் கடினமான காரியங்ககளைப் புரிந்துகொள்ள முடியாதது எனக்குப் பாரமாகயிருக்கிறது. இருந்தபோதிலும் இதை விட்டு விடவோ அல்லது பின்வாங்கவோ நான் மறுக்கிறேன். நான் எனக்காக அதிகமானவற்றைச் செய்திருக்கிறதேவனை விட்டு விலகும்படிக்கு சாத்தானாலும் அவனுடைய தூதனாலும் தூண்டப்படவோ வஞ்சிக்கப்படவோ மாட்டேன். நான் தீர்மானிக்கப்பட்டவன்! இந்த உலகமுழுவதும் தேவனுக்கு எதிராகத் திரும்பினாலும், நான் அவரை விட்டு விலக ஆயத்தமாயில்லை. என்னுடைய எல்லா மனதாலும், உணர்வாலும், ஆவிக்குரிய பலத்தாலும், நான் விசுவாசத்தில் நிலைத்திருப்பேன். நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே பின்பற்றி அவரையே சேவிப்போம்!

# இருண்ட உலகம்

*-Robert Gem*

உலகத்தை வெறுத்து ஜீவ பாதையில் நடந்து
உழைத்திடும் நெஞ்சமே நீ வாராய்
உன்னை நீ வெறுத்து சிலுவையை பார்த்து
உணர்ந்திடும் மனிதா நீ கேளாய்

காணுகின்ற உலகம் வெந்து சாம்பலாகும்
காணாதிருக்கும் பரலோகந்தான் நித்தியமாகும்
இனிவரும் உலகம் மகா பயங்கரமாகும்– உன்
இருதயம் உணராதிருந்தால் என்னவாகும்?

இன்று அவரது சத்தத்தைக் கேளுங்கள்
இருண்ட உலகமே மனந்திரும்புங்கள்
எருசலேமின் மதில்களை கட்டுங்கள்
என்றென்றும் அதில் வாழும்ஜீவன்கள்

தேவனின் சித்தம் கிருபை அறிந்து– இயேசுவை
தேடுவோருக்கு கிடைக்கும் மன்னிப்பு
கிறிஸ்துவின் வாழ்வை வாழ்ந்தால் – உனக்கு
கிறிஸ்வினால் வரும் சீரமீட்பு

எருசலேமிலிருக்கும் சீயோனே – சதா
எருசலையதிபனை வாழ்த்துங்கள்
மனந்திரும்பி கிறிஸ்துவை அறிக்கையிட்டு
மறுஜென்ம முழுக்கினால் இரட்சிப்பு



இரவும் பகலும் அங்கில்லை
இயேசுவே அதில் வெளிச்சமாவார்
பரிசுத்தவான்களே வாருங்கள்
பரம எருசலேமில் வாழுங்கள்

கவிஞர்– ராபர்ட் ஜிம்
தஞ்சை கிறிஸ்துவின் சபை

பாடம் - 12

## பிரசங்கியாரின் உதவி
## The Preacher`s support
**J.C.Choate**

பிரசங்கியாருக்கு உதவிசெய்வதைப் பற்றி வேதம் என்னசொல்கிறது. அவருக்கு சம்பளம் கொடுக்கப்படவேண்டுமா? இந்த முறைக்கு எதிராக எப்போதுமே ஜனங்கள் இருந்திருக்கிறார்கள். ஏன், சபையிலும் கூட சிலர் இந்தமுறையை எதிர்க்கிறார்கள். சில சபைகளில் சகோதரர்கள் ஒவ்வொரு சகோதரர்களை பிரசங்கம் செய்யச் சொல்லி இதைப்பார்த்துக் கொள்ளு கிறார்கள். சில வருஷங்கள் இப்படி செய்த பின்பு அங்கத்தினர்கள் பிரசங்கி யாருக்கு ஒழுங்காக சம்பளம் கொடுப்பது தவறு என்று எண்ணத்தொடங்கு கிறார்கள். வேதம் இதைக்குறித்து என்ன சொல்லுகிறது என்பதை பார்க்கும் முன்பாக என்னை இந்த கேள்விகேட்க அனுமதியுங்கள். பிரசங்கியாரும் ஜீவிக்க வேண்டாமா? அப்படியென்றால் அவர் எப்படி தன்னுடைய செலவுகளையும் தன் தேவைகளையும் சந்திக்க முடியும்? இளம் பிரசங்கியார்கள் தங்கள் பெற்றோர் களோடு வாழும்பட்சத்தில் அவர்ளுக்கு அதிக உதவி தேவைப்படாமலிருக்கலாம். ஒருவர் உதவிபெறுவது தேவையில்லை என்பதற்கு எந்த காரணத்தையும் சொல்லலாம். மறுபடியும் சொல்வதென்றால் சபையும் சகோதரர்களும் மட்டுமே உதவி செய்யக்கூடிய நிலையிலுள்ள ஒரு பிரசங்கியாரைப்பற்றி என்ன சொல்வது? அதைப்பற்றி என்ன?

இயேசு 70 பேரை இஸ்ரவேல் மக்களுக்கு பிரசங்கிக்க அனுப்பிய போது அவர் சொன்னது "புறப்பட்டுப்போங்கள்; ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன். பணப்பையையும் சாமான் பையையும் பாதரட்சைகளையும் கொண்டுபோக வேண்டாம்; வழியிலே ஒருவரையும் வினவவும் வேண்டாம். ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது: இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள். சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும். அந்த வீட்டிலேதானே நீங்கள் தங்கியிருந்து, அவர்கள் கொடுக்கிறவைகளைப் புசித்துக் குடியுங்கள்; வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான். வீட்டுக்கு வீடு போகாதிருங்கள் (லூக் 10:3-7).

பவுல் சொல்லுகிறார்: தன்னுடைய முழுநேரத்தையையும் கர்த்தருக்கென்று கொடுக்கிற சபையின் மூப்பர் சபையிலிருந்து பண உதவி பெற தகுதியுள்ளவராகிறார். அவர் சொல்வதைக் கேளுங்கள்."நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும். போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்றும், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும், வேதவாக்கியம் சொல்லுகிறது"(1 தீமோ 5:17-18). உபா 25:4 -ல் சொல்லுகிறபடி போரடிக்கிற

மாட்டுக்கே பிரதிபலன் கிடைக்கிறது. மறுபடியுமாக அவர் அந்த உண்மையின் அடிப்படையில் எந்த வேலையானாலும் அது மூப்பரோ? பிரசங்கியாரோ? தன் ஊதியத்திற்கு பாத்திரவானாயிருக்கிறார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கிக் கிறவர்கள் சுவிசேஷத்தினால் பிழைக்க வேண்டுமென்று பவுல் விளக்கிச் சொல்கிறார் (1 கொரிந்தியர் 9:13–14).

அப்போஸ்தலனாகவும், பிரசங்கியாகவும் இருந்ததோடு பவுல் கூடாரத்தொழில் செய்கிறவராகவும் இருந்தார் என்பது நமக்குத் தெரியும் (அப் 18:1–3). அவர் கர்த்தருடைய ஊழியக்காரனாயிருந்து அனுபவித்த சிலகாரியங்களை கொரிந்து சபையாருக்கு விளக்கிச் சொல்லும்போது அவரும் தன் சொந்தக்கைகளினாலே வேலை செய்ததைச் சொல்கிறார் (1 கொரிந்தியர் 4:12). சபையானது தொடக்க நிலையில் இருந்த காரணத்தினால் அதன் மீது அவர் பாரம் சுமத்த விரும்பவில்லை. மறுபடியும் கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு அவர் சொல்லும்போது, “இதோ, உங்களிடத்திற்கு மூன்றாந்தரம் வர ஆயத்தமாயிருக்கிறேன்; நான் உங்களை வருத்தப்படுத்து வதில்லை; நான் உங்களுடையதையல்ல, உங்களையே தேடுகிறேன்; பெற்றாருக்குப் பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றார்களே பொக்கிஷங் களைச் சேர்த்துவைக்க வேண்டும். ஆதலால், நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்புகூருகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப் பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக் களுக்காக செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன். அப்படியா கட்டும்; நான் உங்களுக்குப் பாராமாயிருக்கவில்லை; ஆனாலும், உபாயமுள்ள வனாயிருந்து தந்திரத்தினாலே உங்களைப் பிடித்தேனாம். நான் உங்களிடத்திற்கு அனுப்பினவர் களில் எவன்மூலமாயாவது உங்களிடத்தில் பொழிவைத் தேடினதுண்டா? தீத்து உங்களிடத்தில் வரும்படி நான் அவனைக் கேட்டுக்கொண்டு, அவனுடனேகூட ஒரு சகோதரனை அனுப்பினேன்; தீத்து உங்களிடத்தில் ஏதாவது பொழிவைத் தேடினானா? நாங்கள் ஒரே ஆவியையுடையவர்களாய், ஒரே அடிச்சுவடுகளில் நடந்தோமல்லவா?” (2 கொரிந்தியர் 12:14–18).

பவுல் தன்னுடைய சகோதரர்களிடமிருந்து பண உதவியை எதிர்ப்பார்த்தன்மூலம் பாரத்தை சுமத்தாமல் இருந்தபோது சில சகோதரர்கள் அவர் தேவைக்கு சில நேரங்களில் பணம் கொடுத்து உதவி இருக்கிறார்கள். சான்றாக பிலிப்பிய சபையில் உள்ள சகோதரர்கள் அவருக்கு உதவி செய்ததைப் பற்றி நாம் வாசிக்கிறோம். அதைக்குறித்து பவுல் பின்வருமாறு சொல்கிறார். “மேலும், பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதோனியா விலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள் மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நான் தெசலோனிக்கேயிலிருந்த போதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள். உபகாரத்தை நான் நாடாமல் உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன். எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால்

அனுப்பட்டவைகளைச் சுகந்தவாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக்கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன். என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின் படியே உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலிப்பியர் 4:15–19).

இப்பொழுது தேவனுடைய வார்த்தையிலிருந்து உதவி செய்வது அல்லது பிரசங்கியாருக்கு ஊதியம் கொடுப்பது பற்றி நாம் காணமுடியும் என்று நினைக்கிறேன். அல்லது தன்னுடைய முழுநேரத்தையும் கர்த்தருடைய வேலையில் பயன்படுத்துகிற மூப்பருக்கு கொடுப்பது அங்கே உறுதியாக சொல்லப்பட்டிருக்கிறது. இயற்கையாகவே இந்த முறை தவறாக அல்லது முறைகேடாக பயன்படுத்தப்படலாம். இது மற்ற எல்லாக் கொள்கைகளையும் செயல்படுத்துவதில் கூட நடக்கிறது. ஆனால் கவனிக்க வேண்டிய குறிப்பு என்ன வென்றால் இந்த விதமான முறை தேவனால் தடைச்செய்யப்படவில்லை என்பதே.

ஆனால் பிரசங்கியாருக்கு யார் ஊதியம் கொடுக்க வேண்டும்? வேத வாக்கியங்களின்படி சபையே, சபை தனிப்பட்ட அங்கத்தினர் களாலானது. பிரசங்கியாருக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கப் படவேண்டும்? அது அவர் எவ்வளவு வேலை செய்கிறார் என்பதையும் சபையினுடைய கொடுக்கும் சக்தியையும் பொறுத்தது. சபையார் கொடுக்க முடியவில்லை என்றால் அங்கே அந்தப் பிரச்சனை முடிந்து விடுகிறது. ஆனால் சபையானது பகுதி அல்லது முழு ஊதியம் கொடுக்க முடியும் என்றால் அது மூப்பர்களை பொறுத்தது அல்லது மூப்பர்கள் இல்லாவிட்டால் சபையினுடைய சகோதரர்கள் கூடி தங்கள் தேவைகளை விவாதித்து தாங்கள் விரும்புகிற பிரசங்கியாரை தீர்மானித்து தங்களிடம் உள்ள பணத்திற்கு தக்க எவ்வளவு ஊதியம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கலாம். பிறகு பிரசங்கியாரை அழைத்து அவரிடத்தில் இந்த தீர்மானத்தைச் சொல்லலாம். அவர்கள் அந்த ஊதியத்திற்குச் சம்மதித்தால் இந்த பிரச்சனை முடிவு பெறும். இது எவ்வளவு எளிதான காரியம்! ஒரு வேளை அவர்கள் கொடுக்கிற ஊதியம் போதாதென்று பிரசங்கியார் நினைத்தால் அவர் மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டியிருக்கும். சபையாரும் அப்படியே.

ஒரு சபைக்கு போதுமான அளவு பணம் இருந்து நகரத்திலோ, மாநிலத்திலோ, அல்லது மற்ற தேசத்திலோ சில வேலைகளுக்கு உதவக்கூடும். சில சமயத்தில் தங்களைப்போன்ற வேறு சபையிலிருந்து தங்கள் பிரசங்கியாருக்கு பொருளாதார உதவி செய்யும்படி கேட்டுக்கொள்ளலாம். அவர்கள் இதைச் செய்யும்படி தீர்மானிக்கலாம் அல்லது செய்ய முடியாத நிலையிலும் இருக்கலாம். பிரசங்கியாருக்கு உதவி செய்யும் விஷயத்தில் பல சூழ்நிலைகளும் கட்டங்களும் வரலாம். ஆனால் இவை எல்லாவற்றையும் தாங்கள் தீர்மானிக்கின்ற தேவைகளைப் பொறுத்து சீர்ப்படுத்தலாம். நிச்சயமாகவே தங்கள் பிரசங்கியாருக்கு பண உதவி செய்வது சபையினுடைய உரிமையாயிருந்த போதிலும் அவர்களால் முடிந்தால் அப்படி செய்யலாம்.

# அந்நிய பாஷை

## Tongues

*-A.Prabhakaran*

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, கிறிஸ்தவத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி பெரும் குழப்பத்தை ஏற்படுத்துவது இந்த அந்நிய பாஷை. இதைக்குறித்து நாம் ஆராயும்போது முதன் முதலில் பூமியெங்கும் ஒரே பாஷைதான் இருந்தன (ஆதி.11:1). ஜனங்கள் பூமியெங்கும் சிதறிப்போகாதபடிக்கு ஒரு நகரத்தையும், வானத்தைஅளாவும் சிகரமுள்ள ஒரு பெரிய கோபுரத்தையும் தங்களுக்காய் உருவாக்க எண்ணம் கொண்டனர். இதை கண்ட கர்த்தர் ஒரே இடத்தில் அவர்கள் இராதபடி செய்ய அவர்களுடைய பாஷையை தாறுமாறாக்கி, பூமியெங்கும் சிதறப்பண்ணினார் (ஆதி.11:7). இவ்வாறே உலகில் அநேக பாஷைகள் வந்தன. ஜனங்கள் வெவ்வேறு திசைகளை நோக்கி இடம் பெயர்ந்தனர். காலங்கள் ஓடின. உலகத்திலே பாவங்களும் பெருகின. ஜனங்கள் தேவபயமின்றி வாழ்ந்தனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்த பலரை ஏற்படுத்தினார். கடைசியிலே தனது ஒரே பேரான குமாரன் இயேசுவை மனுமக்களுக்காக கொடுத்து அவர்மூலமாக அநேகரை இரட்சித்துவருகிறார் என நாம் அறிகிறோம்.

முதல் நூற்றாண்டிலே சீஷர்கள் இயேசு சொன்னதுபோல பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருந்தனர். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், பூமியின் கடைசியரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்று சீடர்களிடம் இயேசு சொன்ன பிறகு அவர் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார் (அப்.1:8,9). பிறகு சீடர்கள் ஒரு மனப்பட்டு முதன் முதலில் பெந்தேகொஸ்தே நாள் வந்தபோது இவர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் வந்து இறங்கினபடியால் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகள் பேசுத்தொடங்கினர் அங்கு கூடிஇருந்த 17 நாட்டு மக்களும் இவர்கள் தங்களின் ஜென்மபாஷைகளை பேசிக்கொள்கிறார்கள் என்று ஆச்சரியப்பட்டனர். அப்பொழுது பேதுரு எழுந்து அவர்கள் மத்தியில் உரத்தகுரலில் பேசினார். அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டவர்கள் அன்றையதினம் ஏறக்குறை 3000பேர் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அப்பம் பிட்குதலிலும் உறுதியாய் தரித்திருந்தனர். இப்படியாக இயேசுவின் சீடர்களும் அநேக அற்புதங்கள் செய்து அவருடைய வசனத்தை உறுதிப்படுத்தினர். தோமா இந்தியாவிற்கு வந்ததாக கூறப்படுகிறது. ஆனால் இன்று பல்வேறு சபைகளில் அந்நிய பாஷைகள் பேசுகிறோம் என்று வேதத்திற்கு புறம்பாக நடந்து வருகிறார்கள். அப்.2 –ல் சீஷர்கள் பேசும்போது அவர்களுக்கு எதிரே இருந்தவர்களின் பாஷையை பேசினர். அது உலகத்தில் பேசும் பாஷை. தூதர்கள் பேசும் பாஷையல்ல. ஒருவர்

பேசக்கூடிய பாஷைக்கு மற்றொரு நாட்டினர் பேசும் பாஷை அந்நியபாஷையாக இருக்கிறது. அதுவே உண்மை.

1கொரி.14:27–ல் சொல்லப்படுகிறது போல அந்நியபாஷையில் பேசுகிற 2 அல்லது 3பேரும் ஒவ்வொருவராக பேசவேண்டும் என்ற கட்டளை உள்ளது. அது மாத்திரமல்ல அந்நிய பாஷை பேசினால் மற்றொருவர் அர்த்தம் சொல்லவேண்டும், இல்லாவிட்டால் சபையில் பேசக்கூடாது. ஆனால் இன்று அநேக சபைகளில் ஒரே நேரத்தில் அதிகமானபேர் அந்நியபாஷை பேசுகிறோம் என்று கத்தி கூச்சலிடுகின்றனர். இதற்கு அர்த்தம் சொல்ல ஆள் இல்லை. ஏனெனில் இன்றோ அந்நிய பாஷையில் பேசுகிறோம் ஆவியில் நிறைந்திருக்கிறோம் என்று சொல்லி கலகம் உண்டானதுபோல சபை முழுவதும் சத்தம்போடுவதும், ஒழுங்கை இழந்து ஆண்களும் பெண்களும் குதித்தலும் இன்னும் பல அலங்கோலமான நிகழ்ச்சிகளும் நடக்கின்றன இந்த கேலி கூத்துக்கு தகுந்த மாதிரி இசைகளும் இவர்களை உற்சாகப்படுத்துகிறது. தேவனோ கலகத்திற்கு தேவனாயிராமல் சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார் என்றும் (1கொரி.14:33) சகலமும் நல்லொழுக்கமும் கிரமுமாய் செய்யப்படக்கடவது என்றும் பவுல் கூறுகிறார் (1கொரி.14:40). ஆனால் இவர்களோ அதையெல்லாம் அலட்சியப்படுத்துகின்றனர். குறிப்பாக ஸ்திரீகள் சபைகளில் பேசாமல் இருக்கவேண்டும் (1கொரி.14:34,35) இன்றோ சபையிலே அந்நியபாஷை பேசுவதில் அநேகர் பெண்களாகவே இருக்கின்றனர். இன்று பேசப்படுவது அந்நியபாஷையல்ல. இயேசுகிறிஸ்து அந்நியபாஷைகளைப் பற்றி எங்கும் கூறவில்லை. வேதத்தில் கொரிந்து சபைக்கு அந்நிய பாஷையை குறித்த விளக்கத்தை பவுல் தெளிவு படுத்துகிறார்.

மனிதகுரலானது 300 வேறுபட்ட சப்தங்களை உண்டாக்க முடியும். ஒரு மொழியைப் பொறுத்த வரையில் குறைந்தது 30 விதமான சப்தங்கள் உருவாக்கப்படுகின்றன. ஆனால் இன்று அந்நியபாஷையில் பேசுகிறவர்கள் ஐந்து அல்லது ஆறு சப்தங்களை மாத்திரமே திரும்பத்திரும்ப உண்டாக்குகிறார்கள். 5அல்லது 6 சப்தங்களை வைத்து ஒரு மொழியை உருவாக்க முடியாது என்பது மொழியியல் வல்லுநர்களின் கருத்து. பிசாசும் போலியான வரங்களை கொடுக்கிறான். அவனுக்கும் வல்லமை உண்டு (மத்.7:22,23). ஆனால் ஆவிக்குரிய கனியை பிசாசு கொடுக்கமுடியாது. வரங்களை ஆவியானவரே தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார் (1கொரி.12:11). ஆக தேவஆவியைப்பெற்றவர்கள் அந்நிய பாஷைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ஆவிக்குரிய கனிகளாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்ட கனிகளைக் கொடுக்கிறவர்களாக மாறுங்கள். அன்பு ஒருக்காலும் ஒழியாது, மற்றெல்லாம் ஒய்ந்துபோம், ஒழிந்துபோம்.

# பொது அறிவு சோதனை

**1. உலகிலேயே மிகப் பழமையான மன்னர் ஆட்சி நடைபெறும் நாடு எது ? அ) ஜப்பான் ஆ) நேபாளம் இ) ஸ்பெயின்**

**2. சோதனை குழாய் குழந்தை என்பது என்ன ?**

**அ) குளோனிங் முறை ஆ) இரட்டை குழந்தை பிறப்பு இ) கருப்பையின் வெளியே கருத்தரிக்க செய்வது**

**3. இந்திய ஜனாதிபதி எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார் ?**

**அ) பொது மக்களின் வாக்குகளால் ஆ) முதலமைச்சர்களால் இ) எம்.பிக்கள் மற்றும் எம். எல். ஏக்களின் ஆதரவு**

**4. இந்திய துணை ஜனாதிபதி எப்படி தேர்வு செய்யப்படுகிறார் ?**

**அ) பிரதமரால் ஆ) பொதுவாக்கெடுப்பு இ) நாடாளுமன்றத்தின் இரு சபைகள் மூலம்**

**5. எதன் வழியே ஒளி எளிதில் கடந்து செல்கிறது ?**

**அ) கண்ணாடி ஆ) பிளாஸ்டிக் இ) நீர்**

***விடைகள்: 1. ஜப்பான் 2. கருப்பையின் வெளியே கருத்தரிக்க செய்வது 3. எம்.பிக்கள் மற்றும் எம். எல். ஏக்களின் ஆதரவு 4. நாடாளுமன்றத்தின் இரு அவைகள் மூலம் 5. கண்ணாடி.***


ஒ ரே வ ழி

'ஒரேவழி' வேதபாடம்

The Master Course படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய்15-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று Certificate பெற்றுக்கொள்ளுங்கள்

வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College**
**Post Box 5, Batlagundu-624 202**
**S.INDIA**


## நடப்புச் செய்திகள்

- பத்திரிகை துறை சார்ந்த டிப்ளமா படிப்பை சென்னை சாப்ட்வியூ விசுவல் கம்யூனிகேஷன் தமிழில் நடத்தி வருகிறது.
- தமிழ்நாட்டில் புகைப்படத்துடன் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும்பணி, ஏப்ரல் மாதம் முடிவடையும் தலைமை தேர்தல் கமிஷனர் கோபாலசாமி தகவல்.
- ஜவுளி துறையில் இந்திய முதலீட்டைபெற உஸ்பெகிஸ்தான் திட்டம்.
- ஸ்பேஸ் ஹாஸ்பிடல்ஸ் 126 தொலை தூர மருத்துவ மையங்களை நிறுவுகிறது.
- உலகத் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) தமிழகம் வந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுடன் கிரிக்கெட் விளையாடினார்.

# சத்திய வார்த்தையில் சரித்திரம்-2

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 9841017621

தீர்க்கதரிசனமாக அறிவிக்கப்பட்டு, ஆயத்தமாக்கப்பட்டு, இன்றும் மெய்யாகவே நிலைத்திருக்கும் மேன்மையான சபை / ராஜ்யம்.

"ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை / சபையை எழும்பப்பண்ணுவார்" என தீர்க்கதரிசி தானியேல் ( யேகோவா என் நியாயாதிபதி) 2:44 (கி.மு 539-ல்) கூறியதுடன், அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை என்பதையும், அதுவே இயேசு கிறிஸ்துவினால் அடையாளமாக கட்டப்படவிருக்கிற தமது சபை / ராஜ்யத்தைக்குறித்து கூறியுள்ளதை அப்போஸ்தலனாகிய பவுலடியார் "அவரே சபையாகிய சரீரத்துக்கு தலையானவர்" என (கொலோ.1:18) கி.பி.60-ல் கூறியுள்ளார்

எனவே ராஜ்யமானது சபையாகவும், கிறிஸ்துவின் சரீரமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏசாயா கி.மு.701-ல் நகரத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசி (பழைய ஏற்பாட்டின்) கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயம் (ஏசா.2:2-4) எருசலேமில் ஸ்தாபிக்கப் படவிருக்கிற சபையைக் குறித்து கூறியுள்ளார். "பூர்வ காலங்களில் பங்குபங்காவும் வகைவகையாகவும்... திருவுளம் பற்றிய தேவன், கிறிஸ்துவின் போதனை நடைமுறையில் இருந்த காலம் கி.பி.70-ல் (முன்பு கடைசி நாள் எனகுறிப்பிட்டது) "பெந்தெகொஸ்தே" நாளில் தொடங்கி இன்றும், இனியும் உலகமெங்கும் இருக்கப்போகும் (அப்.2) சபையேயாகும். **இச்சபையானது பழைய ஏற்பாட்டின் போதனை நாட்களில் ஸ்தாபிக்கப்படவில்லை** எபி.10:1, 8:8-13) என்பதையும் கூர்ந்து கவனியுங்கள்.

1."என் ஆலயம் அதிலே கட்டப்படும், எருசலேமின் மேல் அளவுநூல் பிடிக்கப்படும்" என சகரியா (கி.மு.15:2. 519-ல்) 1:16; ஏசா.28:16-லும் கூறியுள்ளார்.

எல்லா ஜாதிகளும் (மக்களும்) அதற்கு ஓடிவருவார்கள் என்றதினால் இந்த ராஜ்யம் உலகமெங்கும் இருக்கும் என்பதை (ஏசா.2:2) நிழலாட்டமாக கூறியதை மெய்ப்பிக்கும்படியாக, எருசலேமில் இயேசு தமது சீஷர்களுக்கு கூறப்பட்ட மாபெரும் கட்டளைவாயிலாக (மத்.28:19-20; மாற்.16:15.) நிறைவேற தொடங்கிற்று. **இச்சபை பெந்தெகொஸ்தே நாளுக்குமுன்பாக ஸ்தாபிக்கப்பட்டிருக்க முடியாது!**

ஏனெனில், கிறிஸ்துவானவர் அவ்வேளையில் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப் பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழ வில்லையே! (1கொரி.15:3-4).

**சிறுவர் பகுதி**

# நாகமான்

*வேத பகுதி: 2இராஜாக்கள் 5:1–14*

*-K.Mohan*



அன்பு பிள்ளைகளே நாம் வேதாகமத்தில் இன்று நாகமான் என்பவரைப்பற்றி பார்ப்போம். இவர் ஒரு சிறந்த படைத்தலைவன் 2இரா.5:1–ல் இவர் மகா பராக்கிரமசாலி என்று வேதம் கூறுகிறது. ஆனால் இவருக்கு ஒரு வேதனை இருந்தது என்ன தெரியுமா? குஷ்டரோகம் உடல் எல்லாம் புண். உறைந்த மழைபோன்ற தேகம். இந்த நாகமானுக்கு மனதில் எவ்வளவு வேதனை இருந்திருக்கும்.

இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறுபெண்ணை சிறை பிடித்து வந்தார்கள். இப்பெண் நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்துகொண்டு வந்தாள். அந்த சிறுபெண் நாகமானின் மனைவியிடம் தன் நாட்டில் உள்ள எலிசா தீர்க்கதரிசி இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள். இதை தன் கணவனுக்கு தெரிவித்தாள். நாகமான் ராஜாவிடம் உத்தரவு பெற்று எலிசா தீர்க்கதரிசியை சந்திக்கப்புறப்பட்டான். எலிசாவை சந்தித்தான் அப்பொழுது, எலிசா அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச்சொன்னான். அதற்கு நாகமான் கடுங்கோபங்கொண்டு, புறப்பட்டுப்போய்; அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன் கையினால் குஷ்டரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன். எங்கள் நாட்டில் ஆறு இல்லையா? என்றான். இவன் ஊழியன் தீர்க்கதரிசி கூறியபடி செய்யும் என்றான். அந்தப்படி செய்தபோது இவன் மாம்சம் சிறு பிள்ளையின் மாம்சம்போல் ஆனது என்று பார்க்கிறோம்.

அவன் தன் கூட்டத்தோடெல்லாம் தேவனுடைய மனுஷனிடத்துக்குத் திரும்பிவந்து, அவனுக்கு முன்பாக நின்று; இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத்தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்; என்றான். பாருங்கள் பிள்ளைகளே, இந்த நாகமானுக்குத் தான் எவ்வளவு சந்தோஷம் இருந்திருக்கும். விசுவாசித்து மூழ்கியபோது சுத்தமானான். அதுபோல நீங்களும் கர்த்தரை முழு விசுவாசத்தோடு விசுவாசிக்க வேண்டும். ஆமென்.

**மனப்பாட வசனம்**

“உமது அடியேன் இனிக் கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை” 2இராஜாக்கள் 5:17.

## வேத அறிவுப் போட்டி எண்.77

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் **இம்மாதம் 25ம்தேதிக்குள்** எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். **பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. கர்த்தர் எல்லாத் தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றவன் யார்?
2. தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ என்ன செய் என்று பவுல் யாருக்கு எழுதுகிறார்?
3. விளைவில் ஐந்தில் ஒரு பங்கைப் பார்வோனுக்குக் கொடுக்கவேண்டும் என்ற நியதியை எகிப்துதேசத்திலே கொண்டுவந்தவன் யார்?
4. அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய என்னவெல்லாம் அடங்கியிருக்கிறது?
5. உங்களில் ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யக் கூடாது; உன் தேவனுக்குப் என்ன செய்யவேண்டும்?
6. நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் என்ன செய்யுங்கள் என்று யார் கூறுகிறார்?
7. நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவிலே ஞாபகக் குறியாக வை என்று யாருக்குச் சொல்லப்பட்டிருந்தது?
8. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை என்ன செய்திருக்கிறான்?
9. யோனத்தான் தாவீதை எப்படி சிநேகித்தான்?
10. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு எப்படிப்பட்ட வஸ்திரம் தரிப்பிக்கப்படும்?

*விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கைபண்ணினவனுமாயிருக்கிறாய். 1தீமோத்தேயு 6:12*

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5, Rajan Nagar, Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press,14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: B.Arjunan.

R.N.I. No.TNTAM/2000/3629 Postal Registration. No. TN/SR-164/2006-2008 Lincensed to Post without prepayment License No.TN/WPP-25/SR/2006-2008 Posted at Batlagundu Post Office on 10th Jan. 2007.

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**

**உங்கள் வானொலியில்**





இலங்கை ஆசிய சேவை SW 49 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 வரை கேளுங்கள்
மேலும்

**உங்கள் WIN TV யில்**





ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய் மற்றும்
வியாழன், வெள்ளி காலை 6.15 முதல் 6.30 மணி வரை பார்த்து
சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்







**மாத இதழ் மற்றும் வேதபாடம்**


தேவைக்கு உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

THE WORD OF CHRIST
P.O.Box.No.5
Batlagundu - 624 202. S. India
Phone:04543-263278 Mobile:94435-58041 e.mail:thewordofchrist@sancharnet.in



**Church of Christ Gospel Preachers**



First Row: L to R 1)B.Arjunan, Dindigul Dt.,
2) John Schwartz, Nagai Dt.,
3) P.Boopathi, Karur Dt.,
4) R.Fernandas, Dharmapuri Dt.,
5) D.David Doss, Cuddalore Dt.,
6) J.Alphons, Thiruvarur Dt.,
Sec. Row: L to R 7) Viji, Tuticorin Dt.,
8) S.Rajendran, Erode Dt.,
9)P.David Murugan, Pudukkottai Dt.,
10) Christy Kumar, Theni Dt.,
11) A.Prabakaran, Namakkal Dt.,
12) M.Rajamani, Tirunelveli Dt.

**Monthly Magazine**

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box.No.5
Batlagundu - 624 202